TNPSC Group-2 (2009) original question paper with answers
Exam held on: 22-03-2009
General Knowledge (GK) – B Series

01. கிளைக்காலைஸிஸ் என்பது ............ன் மாற்றமாகும்.
விடை: குளுக்கோஸில் இருந்து பைருவிக் அமிலம்

02. புரோட்டோபிளாசம் என்பது ‘வாழ்வின் மூலாதாரம்’ என்று அழைத்தவர்
விடை: ஹக்ஸ்லீ

03. ATP என்பது
விடை: ஒரு மூலக்கூறு, அது அதிக ஆற்றல்கொண்ட பாஸ்பேட் இணைப்பை பெற்றுள்ளது

04. ஓராண்டு பருவ தாவரங்களில், வாயு பரிமாற்றம் முக்கியமாக ............ வழியாக நடைபெறுகிறது.
விடை: இலைத்துளை

05. மனிதனில் நடைபெறும் காற்றில்லா சுவாசத்தின் இறுதிப்பொருள் ............
விடை: லாக்டிக் அமிலம்

06. நாளமில்லா சுரப்பிகள் என்பவை
நாளங்கள் இல்லாத சுரப்பிகள்
சுரக்கும் பொருள்களை இரத்தத்தில் விடுவிக்கின்றன
ஹார்மோன்களை சுரக்கின்றன
விடை: இவை அனைத்தும்.

07. ஹெபேரின் என்பது
விடை: உறைதலை தடுப்பது

08. கீழ்க்கண்டவற்றுள் எது மெண்டலியன் இரட்டைப் பண்பு கலப்பு விகிதமாகும்:
விடை: 9:3:3:1

09. உலக எய்ட்ஸ் தினம் கடைபிடிக்கும் நாள்
விடை: டிசம்பர் 1-ம் தேதி

10. மனிதனில் இதயத்துடிப்பின் தோற்றத்தில், கீழ்கண்டவற்றிலிருந்து தவறான விடைகளைத் தேர்ந்தெடு:
(i) சைனோ-ஆரிக்குலார் கணு (SA கணு) பேஸ் மேக்கராக செயல்படுவதில்லை
(ii) சைனோ-ஆரிக்குலார் கணு பேஸ் மேக்கராக செயல்படுகிறது
(iii) பேஸ்மேக்கர் வலது ஆரிக்கிளின் மேற்புறத்தில் அமைந்துள்ளது
(iv) பேஸ்மேக்கர் இடது ஆரிக்கிளின் மேற்புறத்தில் அமைந்துள்ளது
விடை: (i) மற்றும் (iv)

11. கீழ்க் குறிப்பிட்டுள்ள தமிழ் இதழ்களுள் எந்த இதழ் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்பட முக்கிய பங்காற்றியது?
விடை: சுதேசமித்திரன்

12. தூத்துக்குடியில் சுதேசி ஸ்டீம் நேவிகேசன் கம்பெனியைத் தோற்றுவித்தவர் பெயரைக் குறிப்பிடுக
விடை: வ.உ. சிதம்பரனார்

We Shine Academy™

13. தமிழகத்தில் புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
    விடை: 2006

14. ‘முதியோர் காதல்’ என்ற பாடலை எழுதிய கவிஞர் யார்?
    விடை: பாரதிதாசன்

15. 2006- உலகக் கோப்பை கால்பந்து நடைபெற்ற நாடு
    விடை: ஜெர்மனி

16. பொருத்துக:

| | | |
|---|---|---|
| விடை: வ.உ.சி | - | திலகரின் வாழ்க்கை வரலாறு |
| கண்ணதாசன் | - | மாங்கனி |
| திரு.வி.க | - | பெண்ணின் பெருமை |
| அப்துல் ரகுமான் | - | முட்டைவாசிகள் |

17. தமிழ்நாட்டில் தற்போது தொலைக்காட்சி தொழிற்சாலை தொடங்கப்படவுள்ள இடம்
    விடை: ஸ்ரீபெரும்புதூர்

18. பின்வரும் விருதுகளில் தமிழ்வளர்ச்சி துறையால் வழங்கப்படாத விருது எது?
    விடை: கலைமாமணி விருது

19. ‘இரட்சணிய யாத்ரிகம்’ எனும் கிறிஸ்தவப் பெருங்காப்பியத்தின் ஆசிரியர் யார்?
    விடை: எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை

20. நாட்டுப்புற நடனக்கலை சார்ந்த ஒன்றைக் கீழ்க்கண்டவற்றிலிருந்து தேர்வு செய்க:
    விடை: காவடி ஆட்டம்

21. கீழ்க்கண்ட அரசர்களுள் யார் ‘கவிராஜா’ என்ற பட்டத்தைப் பெற்றிருந்தார்?
    விடை: சமுத்திர குப்தர்

22. ‘இந்தியாவில் சமய அமைதியின்மை’ என்று கூறப்படும் காலம்
    விடை: கி.மு. ஆறாம் நூற்றாண்டு

23. மகாவீரரின் மறுபெயர்
    விடை: வர்த்தமானர்

24. பிரகஸ்பதி ஏற்படுத்திய தத்துவ முறையின் பெயர்
    விடை: சார்வாகம்

25. ‘சாங்கியம்’ என்பதன் பொருள்
    விடை: எண்

26. ஆரிய சமாஜத்தை தோற்றுவித்தவர்
    விடை: தயானந்த சரஸ்வதி

27. ‘மத்துவா’ ஏற்றுக் கொள்வது
    விடை: பஞ்ச பேதம்

28. சரியான விடையைக் காண்க
    விடை: மாணிக்கவாசகர் என்பவர் திருவாதவூர் முனிவர் என்று அழைக்கப்பட்டவர்

We Shine Academy™

29. 'தமிழ் மறைகள்' பாடியது
   விடை: மூன்று முனிவர்கள்

30. ஐந்தாவது வேதம் என்பது
   விடை: ஆயுர்வேதம்

31. அடிப்படை உரிமைகளை மாற்றியமைக்கும் அதிகாரத்தை இந்திய பாராளுமன்றத்திற்கு வழங்கிய சட்ட திருத்தம்

32. இந்திய அரசியலமைப்பு சட்டத்திலுள்ள நீதி மறு ஆய்வின் அடிப்படை
   விடை: சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட முறை

33. நிதி நெருக்கடி காலங்களில்
   விடை: ஜனாதிபதி மாநில அரசாங்க அதிகாரிகளின், உயர்நீதி மன்ற நீதிபதிகள் உட்பட சம்பளங்களை குறைக்கலாம்

34. பின்வரும் மாநிலங்களில் சமீபத்தில் சரத்து 356 ஐ பயன்படுத்தி கலைக்கப்பட்ட மாநில அரசு எது
   விடை: பீகார்

35. எந்த வருடத்தில் பெரியார் ஜஸ்டிஸ் கட்சியை திராவிடக் கழகமாக மாற்றியமைத்தார்?
   விடை: 1944

36. மனித வளர்ச்சிக் குறியீட்டில் சேர்க்கப்படாத சமுதாய பொருளாதாரக் காரணிகள் யாவை?
   விடை: குழந்தை இறப்பு விகிதம்

37. அடிப்படையின்மை வேலையின்மை எதனால் ஏற்படுகிறது?
   விடை: பற்றாக் குறையான உற்பத்தி திறனால்

38. இந்தியாவில் வறுமைக்கோட்டை நிர்ணயித்த கமிட்டி எது?
   விடை: லக்கடா வாலா கமிட்டி

39. தமிழகத்தின் மக்கள் தொகை, 2001-ம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி எவ்வளவு?
   விடை: 62.4 மில்லியன்

40. இந்திய திட்டக்குழு:
   (i) 1950 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது
   (ii) அரசியலமைப்பின் படி அமைக்கப்பட்ட குழு
   (iii) ஒரு ஆலோசனை அமைப்பு
   (iv) அரசின் ஒரு துறை
   விடை: (i) மற்றும் (iii) சரியானவை

41. 11 எண்களின் சராசரி 60 ஆகும். அதில் முதல் 6 எண்களின் சராசரி 58 ஆகவும் கடைசி 6 எண்களின் சராசரி 63 ஆகவும் இருந்தால், ஆறாவது எண்ணின் மதிப்பு?
   விடை: 66

42. பத்து ஆண்டுகளுக்கு முன்னால் A-ன் வயது B-ன் வயதில் பாதியாக இருந்தது. தற்போதைய அவர்களின் வயது விகிதம் 3 : 4 எனில், அவர்களின் தற்போதைய வயதுகளின் கூடுதல் என்ன?

விடை: 35 வருடங்கள்

43. ஒரு நகரத்தின் மக்கள் தொகை 18,000. மக்கள் தொகை முதல் வருடத்தில் 10 சதவீதமும் இரண்டாவது வருடத்தில் 20 சதவீதமும் உயருமானால், இரண்டு வருடங்கள் கழித்து நகரத்தின் மக்கள் தொகை?
விடை: 23,760

44. ஒரு வட்டத்தின் ஆரத்தில் 50 சதவீதம் குறையும்போது அதன் பரப்பளவின் குறைவு
விடை: 75%

45. மாறுபாட்டுக் கெழுவினை கணக்கிடும் வாய்ப்பாடு
விடை: (S.D/Mean) x 100

46. $Q_1$, $Q_2$ மற்றும் $Q_3$ என்பவை ஒரு புள்ளிவிவரத்தின் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் கால்மானங்கள் எனில், கால்விலக்க குணகமானது
விடை: Q3-Q1/Q3+Q1

47. {2, 4, 5, 6, 8} என்ற புள்ளிவிவரத்தின் திட்ட விலக்கம்
விடை: 2

48. {12, 7, 3, 17, 7, 10, 7, 9, 14} என்ற புள்ளி விவரத்தின் முகடு மதிப்பு
விடை: 7

49. கீழ்க்கண்டவற்றுள் மாறுபட்டது எது?
A) கம்ப்யூட்டர் B) பிரிண்டர்
C) மௌஸ் D) புரோகிராம்
விடை: புரோகிராம்

50. கீழ்க்கண்டவற்றுள் எது மென்பொருள் இல்லை?
A) SPSS B) Windows
C) FORTRAN D) Excel
விடை: FORTRAN

51. ஒரு பொருளின் வேகம் இரட்டிப்பாகும் போது அதன் இயக்க ஆற்றல்
விடை: நான்கு மடங்காகும்

52. ஒரு பொருள் சீரான திசைவேகத்தில் செல்லும் போது அதன் வேக வளர்ச்சி
விடை: பூஜ்ஜியம்

53. டைனமோவின் தத்துவத்தை கண்டறிந்தவர்
விடை: மைக்கேல் ஃபாரடே

54. மின் சாதனங்களுக்கு புவி இணைப்பு தரப்படுவது
விடை: மின் குறுக்கு ஏற்படும்போது, மின்னோட்டம் கெடுதல் விளைவிக்காமல் பூமியைச் சென்றடைய

55. பனிக்கட்டியுடன் சாதாரண உப்பு கலக்கப்படும் போது உருகுநிலை
விடை: குறையும்

56. டி.என்.ஏ என்பது எதனால் உண்டாக்கப்பட்டது
விடை: நியூக்ளியோடைடுகள்



We Shine Academy ™

57. இரும்பு துருப்பிடித்தல் கீழ்கண்டவற்றுள் எது என தேர்வு செய்:
 விடை: ஆக்ஸிஜனேற்றம்

58. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| விடை: | அம்மோனியம் சல்பேட் | - | உரம் |
| | குளோரோபாரம் | - | மயக்க மருந்து |
| | கார்பன் | - | ஒடுக்கி |
| | ஹைட்ரஜன் பெராக்ஸைடு | - | நிறம் நீக்கி |

59. கீழ்க்கண்ட கூற்றுக்களைக் கவனி:
 துணிபு (A): குடிக்கும் சோடா சிறிது அமிலத் தன்மையுடையது
 காரணம் (R): அதில் கார்பன்டைஆக்ஸைடு உள்ளது
 விடை: (A) தவறு, ஆனால் (R) சரி

60. செறிவூட்டப்பட்ட யுரேனியம் என்பது
 விடை: யுரேனியம் U-235

61. மிகவும் வேகமாக வளரக்கூடிய மரம் எது?
 விடை: யூக்கலிப்டஸ்

62. தமிழ்நாட்டில் கூடங்குளம் அணுமின் நிலையம் கீழ்க்கண்ட எந்த நாட்டின் துணையோடு அமைக்கப்படுகிறது?
 விடை: ரஷ்யா

63. தமிழ்நாட்டில் நிலக்கரி சுரங்கம் அமைந்துள்ள இடம்
 விடை: நெய்வேலி

64. கீழ்க்கண்டவற்றுள் எந்த ஒன்று குடும்பக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சையாகும்?
 விடை: விந்துக்குழாய் அகற்றல் (Vasectomy)

65. ஒரு நகரத்தின் மக்கள் தொகை 1,76,400. வருடத்திற்கு 5% வீதம் அதிகரித்தால், 2 வருடம் கழித்து அந்நகரத்தின் மக்கள் தொகை
 விடை: 1,94,481

66. இந்திய தேர்தல் ஆணையம் தனது ஐம்பதாம் ஆண்டு நிறைவை கண்ட தினம்
 விடை: ஜனவரி 17, 2001

67. ராவ்-மன்மோகனின் பொருளாதார முன்னேற்ற வரையறை எந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது?
 விடை: 1991

68. குஜராத்தில் புவி அதிர்ச்சி ஏற்பட்ட நாள்
 விடை: ஜனவரி 25, 2001

69. பின்வருவனவற்றில் யார் தேசிய சிறுபான்மையினர் ஆணையத்தின் (NCM) தலைமைப் பொருப்பை தற்போது ஏற்றுக்கொண்டவர்?
 விடை: முகமது ச.ஃ.பி குரேசி

70. மத்திய கல்வி நிறுவனங்களில் OBC இட ஒதுக்கீடு தலைவராக நியமிக்கப்பட்ட அரசியல் பிரமுகர் யார்?
 விடை: வீரப்ப மொய்லி

71. பொகாரோ இரும்பு எ∴கு தொழிற்சாலை அமைந்துள்ள மாநிலம்
விடை: ஜார்கண்ட்

72. நீலகிரி மலை ஒரு பகுதியாக அமைந்துள்ள தொடர்
விடை: மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடர்

73. தமிழ்நாட்டின் புகழ்பெற்ற ஜவுளிச்சந்தை
விடை: ஈரோடு

74. மணிமுத்தாறு அணைக்கட்டு அமைந்துள்ள மாவட்டம்
விடை: திருநெல்வேலி

75. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி:
கூற்று (A): வறட்சி என்பது படிப்படியாக நடைபெறுகிற நிதழ்ச்சியாதலால் இந்நிகழ்ச்சியை துல்லியமாக முன்கூட்டியே தெரிவிப்பது கடினமான ஒன்று
காரணம் (R): சொற்பமான மழைப்பொழிவும் மற்றும் அதீத அளவில் நிலத்தடி நீரை உறிஞ்சுதல் நிலைமையை மேலும் மோசமாக்குகிறது
விடை: (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

76. பொருத்துக:
விடை:

| | | |
|---|---|---|
| சென்னை | - | $13^0$ வ, $81^0$ கி |
| உறைந்த மண்டலங்கள் | - | துருவங்கள் |
| புவி அச்சு | - | சுழற்சி |
| சந்திர கிரகணம் | - | 100 நிமிடங்கள் |

77. கீழ்க்காணும் சொற்றொடர்களில் சரியானதை தேர்ந்தெடுக்கவும்:
விடை: காற்று மற்றும் புவி சுழற்சி ஆகியவற்றை பொருத்து நீரோட்டங்களின் திசைகள் அமைகின்றன

78. தென் அரைக்கோளத்தில் $55^0$ அட்சக்கோட்டிற்கு தெற்கே அமைந்து உள்ள நீர்ப்பரப்பின் பெயரானது
விடை: தென் பெருங்கடல்

79. ஒரிசா கடற்கரை பெரும்புயலால் தாக்கப்பட்ட நாள்/நாட்கள்
விடை: 29 அக்டோபர், 1999

80. கடலினடியில் ஏற்படும் நிலநடுக்கத்தால் உருவாகும் நீண்ட, இராட்சத பேரழிவு அலைகள்
விடை: கடற்கோள்களாகும் (Tsunami)

81. 'மெய்கீர்த்தி' என்பது
விடை: கல்வெட்டின் வரலாற்று முகவுரை

82. 'சமூகவியல்' என்ற சொல் தோற்றுவிக்கப்பட்டது
விடை: லத்தீன், கிரேக்க சொல்லிருந்து

83. 'சமூகவியல்' என்ற சொல்லை தோற்றுவித்தவர்
விடை: காம்டே

We Shine Academy™

84. யாருடைய ஆட்சிகாலத்தில் உடன்கட்டை ஏறுதல் பழக்கத்தில் இல்லை?
விடை: பல்லவர்

85. ஆரியர்கள் இந்தியாவில் நுழைந்தது மட்டுமல்லாது தங்களுடைய கலாச்சாரத்தை தமிழ் கலாச்சாரத்துடன் எதன் மூலம் புகுத்தினர்?
விடை: குடும்ப அமைப்பு

86. இந்திய அரசியலமைப்பின் முகவுரையை தயாரித்தவர்
விடை: ஜவஹர்லால் நேரு

87. லோக்சபாவிற்கு, யூனியன் பிரதேசங்களின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவது
விடை: நேரடி தேர்தலினால்

88. அடிப்படை உரிமைகள் அரசியலமைப்பின் மனசாட்சி என்று அழைத்தவர் யார்?
விடை: நேரு

89. அரசுக் கொள்கையினை நெறிப்படுத்தும் கோட்பாடுகள் எந்த அரசியலமைப்பிலிருந்து எடுக்கப்பட்டது?
விடை: அயர்லாந்து

90. ஜனாதிபதியின் பாராளுமன்ற உரையை தயாரிப்பவர்
விடை: பிரதம அமைச்சரால் மற்றும் காபினெட்டின் ஒப்புதலோடு

91. இரட்டைப்பதிவு கணக்குப்பதிவியல் முறையினைக் கண்டுபிடித்தவர்
விடை: லூக்கா பேசியாலா

92. இந்தியாவில் பின்பற்றப்படும் வங்கி முறையானது
விடை: கலவை வங்கி முறை

93. 2008-2009 நிதி ஆண்டிற்கு வருமான வரி வதி விலக்குக்கு உட்பட்ட வருமான அளவு
விடை: ரூ. 1,50,000

94. ‘மறு ஏற்றுமதி’ வணிகம் என்றால் என்ன?
விடை: இறக்குமதி-ஏற்றுமதி வணிகம்

95. இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற ஆண்டு
விடை: 1969 (சென்னை)

96. இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் 1930-ம் ஆண்டுடன் தொடர்புடையது
விடை: சட்டமறுப்பு இயக்கம்

97. பொன்னியின் செல்வன் என்ற தமிழ் நாவலை எழுதியவர்
விடை: கல்கி

98. சர்க்காரியா கமிஷன் நியமனம் செய்யப்பட்டது
விடை: மத்திய-மாநில அரசு உறவு முறையை ஆராய

99. தமிழ்நாட்டில் உப்பு சத்தியாகிரக இயக்கத்தை தலைமையேற்று நடத்தியவர்
விடை: C. ராஜகோபாலாச்சாரி

100. தமிழ்க் கவிஞர் சுப்பிரமணிய பாரதியின் பிறந்த ஊர்
விடை: எட்டயபுரம்


We Shine Academy™